உ

கடவுள் துணை.

# அழுகணி சித்தர்

## பாடல்.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதருஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்பமுதலிவீதி, மதருஸ், என், சி.

# விளம்பரம்.

## சாதகாலங்காரம்,

### மூலமும் - உரையும்.

——(*)——

இச் சென்னையின்கண் முன்னோர்கள் அருளிச்செய்த பல சோதிட நூல்கள் உள்ளன. அவற்றுள் இரண்டொரு நூற்களே மிக்க பயன்படத்தக்கவைகளும், வரிசைக்கிரமமாகச் செய்யப்பட்டவையுமாகும். அப்படிப்பட்டவற்றுள் சாதகாலங்காரம் என்பதுஎன்று அதற்கு இதுவரைக்கும் உரையில்லாத பெருங்குறையை நோக்கிப் பலரும் என்னை வற்புறுத்தியபடியால் அதற்குத் தக்கவாறு உரையெழுதி பன்னிரண்டு பாகங்களும் நன்றாய் விளங்கும்படி விளக்கி அச்சிட்டிருக்கின்றோம். வேண்டியவர்கள் எம்மிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்

இதன் விலை ரூபா 1 8 0

உ

கடவுள் துணை.

# அழுகணிசித்தர் பாடல்.

மூலப்பதியடியோ மூவிரண்டுவீட்டிலே கோலப்ப
தியடியோ குதர்க்கத்தெருநடுவே, சாலப்பதிதனிலே தூ
ணலாய்வளர்ந்தகம்பம், உந்தன் மேலப்பதிதனிலே என்
விளையாட்டைப்பாரேனே. 1

எண்சாணுடம்படியோ ஏழிரண்டு தாயிலடி பஞ்சா
யக்காரரைவர், பட்டணமுந்தானிரண்டு அஞ்சாமற்பே
சுகிறார் ஆக்கினைக்குத்தாம்பயந்து, நெஞ்சாரசில்லாமல்
என்கண்ணம்மா நிலைகடந்துவாரேண்டி 2

முத்துமுகப்படியோ முச்சந்திவீதியிலே பத்துவித
ம்பரப்பிப் பஞ்சணையின்மேலிருத்தி, அத்தையடக்கிவி
லை யாருமில்லாவேளையிலே குத்துவிளக்கேற்றி என்க
ண்ணம்மா கோலமிட்டுப்பாரேனே. 3

சம்பா அரிசியடி சாதம் சமைத்திருக்க உண்பாய்
நீ என்றுசொல்லி உழக்குழக்கு நெய்வார்த்து முத்து
போலன்னமிட்டு முப்பழமுஞ் சர்க்கரையும் தித்திக்குந்
தேனமிர்தம் என்கண்ணம்மா தின்றுகளைப்பாரேனே. 4

பைம்பொற் சிலம்பணிந்து பாடகக்கால்மேல்தூக்
கி செம்பொற்களையுடுத்திச் சேல்விழிக்கு மையெழுதிச்

அம்பொற்பணிபூண் ட்றகோண வீதியிலே சம்பத்தின் மேலிருந்து என்க்ண்ணம்மா கண்குளிரப்பாரேனோ. 5

எட்டாப் புரவியடி ஈராறுகாலடியோ விட்டாலும் பாரமடி வீதியிலேநான்மறித்துக் கட்டக்கயிறெடுத்துக் கலைநாலுஞ்சேர்த்திறுக்கி அட்டாளதேசமெல்லாம் என் கண்ணம்மா ஆண்டிருந்தாலாகாதோ. ... ... 6

கொல்ல னுலைப்போற் கொதித்ததடி யென்வயிறு நில்லென்றுசொன்னால் நிலைநிறுத்தக் கூடுதில்லை நில்லெ ன்றுசொல்லியல்லோ நிலைநிறுத்த வல்லார்க்குக் கொல் லென்று வந்தநமன் என் கண்ணம்மா குறியேறிப் போ கேனோ. 7

ஊத்தை ஜடலமடி என்கண்ணே உப்பிருந்தபாண் டமடி மாற்றிபிறக்க மருந்தெனக்கு கிட்டுதில்லை மாற்றி பிறக்க மருந்தெனக்கு கிட்டுமென்றால் ஊத்தைஜடலம் விட்டு உன்பாதஞ்சேரேனோ. 8

வாழைப்பழந்தின்றால் வாய்நோகு மென்றுசொல் லி தாழைப்பழந்தின்று சாவெனக்கு வந்ததடி தாழைப் பழத்தை விட்டுச் சாகாமற் சாகவல்லோ வாழைப்பழ முந்தின்றால் என்கண்ணம்மாவாழ்வெனக்குவாராதே. 9

ஐயூரிலேயிருந்து பாழூரிலே பிறந்து மெய்யரிவ ற்போவதறகு வேதாந்தவீடறியேன் மெய்யூரிற் போவ

தற்கு வேதாந்தவீடறிந்தால் ஸ்பய்யூரும் மெய்யூரும் என்கண்ணம்மா பாழாய்முடியாதோ. 10

மாமன்மகளடியோ மச்சினியோநானறியேன் காமன்கணையெனக்குக் கனலாகவேகுதடி மாமன்மகளாகிமச்சினியும்நீயானல் காமன் கணைகளெல்லாம் என்கண்ணம்மா கண்விழிக்கவேகாதோ. 11

அந்தரத்தைவில்லாக்கி ஐந்தெழுத்தையம்பாக்கி மந்தரத்தேரேறியல்லோ மான்வேட்டையாடுதற்கு சந்திரருஞ்சூரியரும் தான்போந்தகாவனத்தே வந்துவிளையாடியல்லோ என்கண்ணம்மாகண்குளிரக்காண்பேனே 12

காட்டானையேறி கடைத்தெருவே போகையிலே நாட்டார்நகையறிந்து நகைபுரியப்பார்ப்பதன்றோ நாட்டார் நகையறிந்து நகைபுரியப் பார்த்தாலுங் காட்டானைமேலேறி என்கண்ணம்மா கண்குளிரக்காண்பேனே.

உச்சிக்குக்கீழாயோ ஊசிமுனைவாசலுக்குள் மச்சுக்குள்மேலேறி வானுதியந்தானெடுத்து கச்சைவடம்புரியக் காயவூர்பாதையிலே வச்சுமறந்தல்லோ என்கண்ணம்மா வகைமோசமானேண்டி. 14

மூக்கா லரும்பெடுத்து மூவிரண்டாய் தான்றூக்கி நாற்கால்வளைபரப்பி நாற்சதுரவீடுகட்டி நாற்கால்பரப்பி நாற்சதுர வீட்டினுள்ளே முக்காலைக்காணுமல் என்கண்ணம்மா முழுதுந்தவிக்கிறேண்டி. 15

காலமலர் தூவ வொருத்தெனக்கு வந்ததடி பாசவலை தொலைக்கப் பாசவலை ஓட்டுதில்லை பாசவலைதொலைக்கப் பாசவலை நிற்குமென்றால் காலவோர் மூன்றும் என்கண் ணம்மா கண்ணெதிரேநில்லாதே 16

தங்காயந் தோன்றாமற் சாணலர்ந்த கொல்லைகட்டி வெங்காய நாத்துவிட்டு வெகுநாளாய்க் காத்திருந்தேன் வெங்காயத்தின்னுமல் மேற்றோலைதின்றலவோ தங்காயந் தோணுமல் என்கண்ணம்மா சாகிரண்டிசாகாமல். 17

பற்றற்றநீரதிலே பாசிபடர்ந்தது போல் உற்றுற்றுப்பார்த்தலவோ உன்மயக்கந் தீர்ந்தாக்கால் பற்றற்ற நீராகும் என்கண்ணம்மா பாசியதுவேறாமோ. 1

சுற்றாரு முற்றாருந் தொண்ணூற் றயாரதிலே உற்றாரும்பெற்றாரும் ஒன்றன்றே யானிருந்தே உற்றாரும் பெற்றாரும் ஊரைவிட்டுப் போகையிலே சுற்றாருமில்லாமல் என்கண்ணம்மா துணையிழந்துநின்றதென்னே. 19

கண்ணுக்கு மூக்கடியோ காதோர மத்திபத்தில் உண்ணுக்குமேலேறி உன்புதுமைமெத்தவுண்டு உண்ணுக்குமேலேறி உன்புதுமைகண்டவர்க்கு கண்ணுக்குமூக்கடியோ என்கண்ணம்மா காரணங்கள்மெத்தவுண்டே. 20

சாயச்சரக்கெடுத்து சாதிலிங்கம் தான்சேர்த்து மாயப்பொடிகலந்து வாலுழுவை நெய்யூற்றி பொட்டென்

றுபொட்டுமிட்டு புருவத்திடை நடுவே இட்டமருந்தா லே என்கண்ணம்மா இவ்வேஷமானேண்டி 21

பாதாளமூலியடி பாஷாணந்தான்சேர்த்து வேதா ளங்கூட்டியல்லோ வெண்சாறை பெய்யூற்றி செந்தூர மையடியோ ஜெகமெலாந்தான்மிரட்டி தந்தமழிந்தாலே என்கண்ணம்மா தனலாகவேகுதடி. 22

கள்ளர்பயமெனக்குக் கால்தூக்கவொட்டாமல் பிள் ளையழு தநின்றால் பெற்றவட்குப்பாரம்டி பிள்ளையழுகா மல் பெற்றமனம் நோகாமல் கள்ளர்பயமெனக்கு என்க ண்ணம்மா கடுகளவுகாணுதே. 23

பட்டணத்தை யாளுகிற பஞ்சவர்கள் ராஜாக்கள் விட்டுப்பிரியாமல் வீரியங்கள் தான்பேசி விட்டுப்பிரிந்த வரே வேறுபடுங்காலம் பட்டணமுந் தான்பரிபோய் எ ன்கண்ணம்மா படைமன்னர்மாண்டதென்ன 24

ஆகாப்புலயனடியஞ்ஞானந்தான்பேசி சாகாத்தலே யறியேன் தன்னறிவு தானறியேன், வேகாதகாலறியேன் விதிமோசமானனடி நோகாமல் நொந்தல்லோ என்கண ணம்மா கொடியில்மெழுகானனடி 25

தாயை சமமென்றே தந்தையரை பொய்யென்றே மாயக்கலவிவந்து மதிமயக்கமானனடி மாயக்கலவிவிட்டு மதிமயககந் தீர்ந்தாக்கால தாயுஞ்சதமாமே என்கண்ண ம்மா தந்தையருமொப்பாமே. 26

அஞ்சாதகள்ளனடி ஆருமற்ற பாவியடி நெஞ்சார ப்பொய்ச்சொல்லும் நேயமில்லா துஷ்டரன் கஞ்சாவெறி

யனடி கைசேதமாகுமுன்னம் அஞ்சாதேயென்று சொ
ல்லி என்கண்ணம்மா ஆண்டிருந்தாலாகாதோ. 27

உன்னை மறந்தல்லோ உலுத்தமரமானேன் தன்னை
மறந்தார்க்குத் தாய்தந்தை யில்லையடி தன்னைமறக்காமற்
றூயாருமுண்டானால் உன்னைமறக்காமல்என்கண்ணம்மா
ஒத்திருந்துவாழேனோ. 28

காயப்பதிதனிலே கந்தமூலம்வாங்கி மாயப்பணிபூ
ண்டு வாயுஞ்சரக்கெடுத்து ஆயத்துறைதனிலே ஆராய்ந்
துபார்க்கு முன்னே மாயச்சுருளோலை என்கண்ணம்மா
மடிமேல்விழுந்ததென்னே. 29

சித்திரத்தை குத்தியல்லோ சிலையை யெழுதிவை
த்து உத்திரத்தைக் காட்டாமல் ஊரம்பலனுனேன் உத்
திரத்தைக்காட்டி யல்லோ ஊரம்பலமானால் சித்திரமும்
வேறுமோ என்கண்ணம்மாசிலையுறுகுலையாதோ. 30

புல்லரிடத்திற்போய்ப் பொருள்தனக்குக் கையேந்
திப் பல்லைமிகக்காட்டிப் பறக்கவிழிக்கிறண்டி பரக்கவிழி
க்காமல் என்கண்ணம்மா பொருளெனக்குத்தாராயோ.

வெட்டுண்ட சக்கரத்தால் வேணதனமளித்துகுட்
டுண்டுநின்றநடு கோடிமனு முன்னாலே குட்டுண்டு நில்
லாமற் கோடிமனு முன்னாலே வெட்டுண்ட பிணிநீங்கி
என்கண்ணம்மா விழித்துமிகக் காட்டாயோ. 32

அழுகணிசித்தர்பாடல்
முற்றிற்று.